# இப்னு அரபியும் ஸூஃபிசமும்

அபூ உசாமா

ஸூஃபிசம் என்ற பெயரில் இஸ்லாமிய சமுதாயத்தில் மூட நம்பிக்கைகளையும், இஸ்லாத்தின் அடிப்படை கொள்கைகளைத் தகர்த்தெறியும் சம்பிரதாயங்களையும் இவ்வுலகில் பரப்ப மூலகாரணமாக இருந்தவர் இப்னு அரபி என்பவராவார். இவர் ஹிஜ்ரி 560-ல் பிறந்து, 638-ல் காலமானார். இவர் கிரேக்கத் தத்துவத்தின் அடிப்படையில் இஸ்லாமியக் கொள்கையைச் சித்தரித்துக் காட்ட முயன்றார். இவருடைய பிரச்சாரத்தின் அடிப்படையே ''அத்துவைதம்'' என்ற படைத்தவனும் படைக்கப்பட்டவைகளும் ஒன்று, இரண்டையும் வெவ்வேறாகப் பிரிக்கக் கூடியவன் தவறான கொள்கைகளில் இருக்கின்றான் என்பதாகும். இவருடைய இந்த கொள்கையை அவர் எழுதிய **'புசூசுல் ஹிகம்'** என்ற புத்தகத்தில் முழுக்க முழுக்கப் பார்க்க முடியும்.

இறைவன் என்று ஒருவன் தனியாகக் கிடையாது. நாம் காணுகின்ற இந்த உலகத்தோடு இரண்டரக் கலந்தவன்தான் இறைவன். தூணிலும், துரும்பிலும் இறைவன் இருக்கின்றான். உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் நேர்வழியில்தான் இருக்கின்றான். நல்லவன், கெட்டவன் என்ற பாகுபாடெல்லாம் கிடையாது. வேதனை என்று ஒன்று கிடையாது. அப்படியே வேதனை உண்டு என்று வைத்துக் கொண்டாலும் அது அவனுக்கு இன்பமாகத்தான் இருக்கும். காரணம், மோட்ச்சமடையாத மனிதனே கிடையாது என்று இப்னு அரபி என்பவர் கூறியுள்ளார். ***புசூசுல் ஹிகம், 158***

அத்வைதம் என்ற கொள்கையைப் பரப்பியதோடு மட்டுமல்லாமல், அவ்லியா என்று ஒரு பிரிவினர் உண்டு என்றும், அவர்களுக்குப் பல வல்லமைகள் உண்டு என்றும் நபிமார்களைவிட அவ்லியாக்கள் என்போர் சிறந்தவர்கள் என்றும், தன்னை அந்த அவ்லியாக்களில் இறுதியாக வந்தவ ரென்றெல்லாம் கூறி, அதன் பெயரால் அனாச்சாரங்களைக் கட்டவிழ்த்து விட்டவரும் இவரே ஆவார்.

அல்லாஹ்வும் ஒரு பெரிய மனிதன்தான் என்று கூறியுள்ளார். அதாவது ஒரு பொருள் தன்னைத்தானே பார்ப்பது என்பது ஒரு கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்ப்பது போலாகும். ஆதம்(அலை) அவர்கள் அல்லாஹ்வின் எதிர் தோற்றமாகவே இருந்தார்கள். எனவே ஆதமை இவ்வுலகில் தனது பிரதிநிதியாக ஆக்கி யிருப்பதாகக் கூறினான் என்று குறிப்பிட்டுள்ளார்.

*புசூசுல்ஹிகம், 43*

அல்லாஹ் தனது பிரதிநிதித்துவத்தைக் கொடுக்க வேண்டுமானால் ஒரு முழுமையான மனிதனுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று கருதிய இறைவன் அவரைத் தன் தோற்றத்தில் படைத்தான். அவரின் வெளித் தோற்றத்தை மனித இயல்பான தோற்றத்திலும், அவரின் அகத்தோற்றத்தை ஆண்டவன் தன் தோற்றத்திலும் படைத்தான். எனவே ஆண்டவனை மனிதன் நெருங்கும் போது அவன் கையாகவும், அவன் காலாகவும் மாறு வதாகக் கூறுகின்றான் என்று கூறி, குர்ஆன், ஹதீஸுக்கு கிரேக்க தத்துவத்தின் அடிப்படையில் விளக்கங்களைக் கொடுத்துள்ளார். *புசூசுல்ஹிகம், 55*

இவர் தனது அறிவுக்குத்தான் முதலிடம் கொடுக்கிறார். தன் அறிவு சொல்வதற்குத் தக்கவாறு குர்ஆனுக்கு வியாக்கியானம் செய்கின்றார்.

ஆண்டவனை ஒரு பெண்ணாகக் கற்பனை செய்து தன் நூல் முழுவதும் குறிப்பிட்டுள்ளார். ஆண்டவனை ஒரு பெண்ணாகக் கற்பனை செய்து பார்க்கும் போதுதான், அவனை முழுமையாக நம்மால் அறிய முடியும். எனவே நபி(ஸல்) அவர்கள் பெண்களை மிகுதியாக நேசித்தார்கள். காரணம் நம்முன் ஒன்றை ஏற்படுத்தி அதன் வாயிலாக அன்றி நேரடியாக ஆண்டவனைச் சந்திக்க முடியாது. பெண்ணுடைய தோற்றத்தில் ஆண்டவனைக் காண்பதில் கிடைக்கின்ற இன்பத்தைப் போன்று வேறு எந்தத் தோற்றத்திலும் கிடைப்பதில்லை. இந்த அடிப்படையில் ஒருவன் பெண்ணை நேசிப்பானாயின் அவன் தெய்வீக நேசத்தைப் பெற்றவ னாகின்றான் என்றெல்லாம் கூறி இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு ஒவ்வாத பல நச்சுக்கருத்துக்களைப் பரப்பியுள்ளார்.

*புசூசுல்ஹிகம், 217*

மேலும் அவர் தன் நூலில், நபி நூஹ்(அலை) நபி ஹூத்(அலை) இவர்கள் கூட்டத்தினரான காஃபிர்களையும், ஃபிர்அவ்னையும் புகழ்ந்து கூறியுள்ளார். நூஹ்(அலை) இப்ராஹீம்(அலை), மூஸா(அலை) போன்ற இறைத் தூதர்களைக் குறை கூறியுள்ளார்.

இப்னு அரபியும், அவரது கொள்கையில் நம்பிக் கைக் கொண்டவர்களும், அவர்களின் பிரபல்யமான '**தில்மசானி**' என்பவனுடைய கொள்கையே பின்பற்றி னார்கள். இவனிடத்தில் இப்னு அரபி எழுதிய '**புசூசுல் ஹிகம்**' என்ற நூலைப் படித்துக்காட்டி இது குர்ஆனுக்கு முற்றிலும் மாறுபட்டதாக வல்லவா இருக்கிறது என்று கேட்கப்பட்ட போது, குர்ஆன் முழுவதும் ஷிர்க்காக இருக்கிறது, நாங்கள் கூறுவதுதான் தவ்ஹீது என்று கூறினான். மேலும் அவனிடம் படைத்தவனும், படைக்கப்பட் டவையும் ஒன்றுதான் தோன்றி இருக்கிற எல்லாம் ஒன்றுதான் இரண்டு என்பதற்கே இடமில்லை, என்று கூறுகிறீர்களே, அப்படியானால் ஏன் மனைவியோடு உறவாடு வதை ஆகுமானதாகவும், சகோதரியை ஹராமாகவும் ஆக்கப்பட்டுள்ளது? என்று கேட்கப்பட்டபோது, எல்லாமே எங்களுக்கு ஹலால்தான் எதுவுமே எங்களுக்கு ஹரா மானதாக இல்லை என்று கூறினார்.

மேலும் இந்தக் கொள்கை யுடையவர்கள் கூறுகிறார் கள், கிருஸ்தவர்கள் நபி ஈஸாவை மட்டும் அல்லாஹ் என்று நம்பியதனாலேயே காஃபிர்களாகக் கருதப்பட் டார்கள். எல்லாம் அல்லாஹ் என்று நம்பியிருப்பார் களானால் காஃபிர்களாகக் கருதப்பட்டிருக்க மாட்டார்கள் என்று இந்த நாத்திகர்கள் கூறுகிறார்கள். இவ்வாறே சிலைகளை வணங்கியவர்கள் சிலைகளை மட்டும் வணங்கியதாலேயே தவறிவிட்டார்கள். எல்லாவற்றையும் வணங்கி யிருப்பார்களானால் தவறியிருக்கமாட்டார்கள் என்று கூறுகின்றனர்.

''**புத்திக்குப் பொருந்தாத சில விஷயங்கள் எங்களுக்கு வெளிப்பட்டுள்ளன அவற்றை யாராவது அறியவிரும்பினால் புத்தியையும், ஷரீஅத்தையும் எடுத் தெரிந்து விட்டு எங்களிடம் வரட்டும்**'' என்று இவர்களில் முக்கியமானவனான 'தில்மசானி' என்பவன் கூறியுள்ளான்.

இது போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவர்கள் தான் தற்காலத்தில் தரீக்காக்கள் என்ற பெயரில் இயங்கி வரும் போலி ஷேக்மார்கள். இவர்கள் இப்னு அரபியின் கொள்கையான அத்வைதக் கொள் கையை நம்பியதனாலேயே இவர்கள் எவரைத் தங்களுடைய ஷைக் என்று கருதுகிறார்களோ அவரின் பெயரைப் பலமுறை திக்ரு செய்கின்றனர். ஷைக்கை அழைப்பது என்பது அல்லாஹ்வை அழைப்பதுதான் என்று கூறுகின்றனர். காரணம் ஷைகுதான் அல்லாஹ், அல்லாஹ்தான் ஷைகு, ஷைகு வேறு அல்லாஹ்வேறு என்பது ஷிர்க்காகும் என்பதுதான் இவர்களின் கொள்கை. சில வேளை தங்களைத் தாங்களே அழைத்துக் கொள் வார்கள். தன்னையே **'அனல்ஹக்' என்று இப்படிச் சொன் னவர்களில் ஒருவர்தான் ஹல்லாஜ் என்பவர்'** இதற்காக அவர் தூக்குமேடையில் ஏற்றிக் கொல்லப்பட்டார்.

காண்பதெல்லாம் இறைவன் என்ற கொள்கை யுடைய தரீக்காகாரர்கள், தாங்கள் செய்து வரும் திக்ருகள் அவன், இவன் என்று குறிக்கும் 'ஹு' என்றும், அவள், இவள் என்று குறிக்கும் 'ஹா, ஹீ' என்றும், திக்ருகள் செய்வதை நாம் காணலாம். காரணம் இவர் களுடைய கொள்கையில் காண்பதெல்லாம் கடவுள்தான். அவனும், இவனும், அவளும், இவளும் எல்லாருமே கடவுளே.

இவர்கள் வணக்க வழிபாடுகளைச் செய்கின்றார்க ளென்றால், தங்களுக்குத் தாங்களே செய்து கொள்கி றார்களே யல்லாமல் வேறு ஒருவனுக்காக இவர்கள் செய்யவில்லை என்பதுதான் இவர்களில் கொள்கை. இக்கொள்கையை இவர்களின் தலைவர்களின் ஒருவரான இப்னுல் பாரின் என்பவர் பின்வருமாறு கற்பனை செய்து கூறுகிறார்

நான் தொழும் தொழுகையெல்லாம் அவளுக் காகவே தொழுகின்றேன். அதில் அவள் எனக்குத் தொழு வதாகக் காண்கின்றேன். நாங்கள் இருவரும் ஒரே தொழு கையாளி. நாங்கள் இருவரும் ஒவ்வொரு தொழுகையிலும் இணைந்து விடுகின்றோம். நானே எனக்காகத் தொழு தேன். என்னுடைய தொழுகை வேறு யாருக்காகவு மில்லை என்று கூறியுள்ளார்.

மற்றொரு இடத்தில் பின்வருமாறு கூறுகிறார்

நான் அவளாகவும், அவள் நானாகவும் ஆகி விட்டோம். இருவருக்குமிடையில் எந்த வேறுபாடும் இல்லை. எனக்கே என் உடல் தொழுதது. நானே எனக்குத் தூதனாக என்னிடமிருந்தே அனுப்பப்பட்டேன். என்னுடைய உடல் என்னுடைய சான்றுகளைக் கொண்டு என்மீது ஆதாரமாக ஆகிக்கொண்டது. நான் அழைக்கப்பட்டேனாயின் அதற்குப் பதில் கொடுக்கின்றேன். என்னை அழைப்பவனுக்கு அவள் பதில் அளிக்கிறாள் என்று கூறியுள்ளார்.

தன்னை அல்லாஹ்வாகவே சித்தரித்துக் கூறியுள்ளார். இதே அடிப்படையில்தான் எங்கிருந்து யார் என்னை அழைத்தாலும் அவருடைய அழைப்பை ஏற்று உடனடியாக வந்து அவருக்குப் பதில் கொடுக்கின்றேன் என்று முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி(ரஹ்) அவர்கள் சொன்னதாக அவர்கள்மீது சிலர் சில பாடல்களை இயற்றி விட்டிருக்கின்றனர். அந்தப் பாடல்களைப் பக்திப் பரவசமாகப் படித்து லயிக்கின்ற குருட்டு நம்பிக்கை கொண்ட முஸ்லிம்கள் எத்தனையோ பேர், இந்த மூடக் கொள்கையில் மூழ்கித் தங்களை நரகத்திற்காகச் சித்தப் படுத்திக் கொள்கின்றனர். எனவே தமிழக முஸ்லிம்களின் (முன்பு) நம்பிக்கைக்குரிய ஸ்தாபனமான ஜமாஅதுல் உலமா சென்ற 1987-ஆம் ஆண்டு மார்ச் 14,15-ல் நடத்திய மாநிலம் தழுவிய மௌலவிகளின் மாநாட்டில் எடுத்த தீர்மானங்களை நினைவிற்குக் கொண்டு வந்தோம். தமிழகம், மற்றும் மாநில முஸ்லிம்களின் ஈமானைக் கொள்ளையடித்து இப்லீஸின் ஆசையை நிறைவு செய்ய இரவு பகலாக முயற்சி செய்து தயாரான முடிவுகளை ஜமாஅத்துல் உலமா பிரகடனப்படுத்தியது. அப்பிரகடனத்தின் எட்டாவது தீர்மானம் இப்னு அரபி, கஸ்ஸாலி போன்றவர்களினதும் இன்னும் சில்லரைப் பேர்வழி ஸூஃபிகளினதும் நடைமுறைகளான தஸவ்வுஃப், ஸலூக்குடைய ஷைத்தானியத்துகளை மார்க்கத்தில் சேர்த்து விட்டார்கள்.

இதோ அவர்களுடைய தீர்மானம்; ''தஸவ்வுஃபும், ஸுலூக்கும் ஷரீஅத்தில் உள்ள வணக்க வழிபாட்டுக்கு உறுதுணையான ஒன்றாகும் என்பதையும், அதற்கான பைஅத் (முரீது வியாபாரம்) கையாளப்படுவதும் திக்ருகளின் (நபிநாயகத்தின் அனுமதி பெறாத) மூலம் உயர்வு

அடைவதும் நமது மேன்மைக்குரிய நல்வழி நடந்த மஹான்களால் (இப்னு அரபி, கஸ்ஸாலி இன்னும் இவர்களைப் போன்ற ஸூஃபிகளால்) சரி காணப்பட் டதாகும், என்பதால் முஸ்லிம்கள் அதைப் பின்பற்றுவது சிறப்புக் குரியதாகும் என்று முடிவாக்குகிறது. எனவே முஃமின்களே! சிந்தியுங்கள். ஆதாரப்பூர்வ விளக்கங் களுடன் குர்ஆன், ஆதாரப்பூர்வ ஹதீஸ், ஆதாரப்பூர்வங் களின் வெளிச்சத்தில் சிந்தியுங்கள். தடையின்றி உண்மை களை அறிந்து கொள்வீர்கள்.

மேலும் இப்படிப்பட்ட மௌலவீகள் பற்றி அறிந்து கொள்ள இன்னுமொரு விளக்கம் தருகிறோம் சிந்தியுங்கள்.

## மௌலவீ என்றால் யார்?

மௌலா என்ற பதத்துக்கு எஜமான் என்பது பொருள். இஸ்லாத்தில் எஜமான் அடிமை என்ற எந்தப் பாகுபாடும் மனிதர்களில் இல்லை. எல்லா மனிதர் களுக்கும் அல்லாஹ்வே எஜமானாக (மௌலாவாக) இருக்கிறான். அப்படி இருக்கும்போது பாமரமக்கள் என ஒரு பிரிவை உண்டு பண்ணி அவர்களை அடிமைகள் போலவும், அவர்களுடைய மார்க்க விவகாரத்தில் எஜமானர் களாகத் தங்களைக் காட்டிக் கொள்வதற்காகவும் மௌலவீ எனத் தங்களைச் சொல்வது ஒரு கூட்டம்,

இன்றைய முஸ்லிம்களில் பெரும்பாலோர் ‘ஷரீஅத்’திற்கு முரணாகச் செய்து வரும் செயல்களைக் கண்டு நாம் தடுக்க முற்படும்போது அவர்கள் கூறுகிறார் கள், ஒரு மௌலவீதான் இப்படிச் செய்யச் சொன்னார் இந்த மௌலவீ அந்த மௌலவீது என மௌலவீகள் மீதே பழியைப் போடுகிறார்கள்.

மௌலவீ என்ற சொல்லை ஆராயும்போது அரபி யிலோ, உருதுவிலோ, பாரசீகத்திலோ, சமஸ்கிருதத்திலோ வேறு எந்த மொழியிலோ மார்க்க அறிஞர்கள் என்ற விளக்கத்தைக் காண முடியவில்லை. எனவே மௌலவீ பட்டத்துக்கும் இஸ்லாத்துக்கும் சம்பந்தம் இல்லை என விளங்கும் எமக்கு ஆதாரப்பூர்வ நிகழ்ச்சி யொன்று சான்று பகர்கிறது

சென்ற 1978-இல் சங்கரன் கோவிலில் ஜமாஅத் துல் உலமா மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் மூத்த மௌலவீகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

அவர்களுக்கு இடையே மார்க்கத் தெளிவு பெற்றுக் கொண்டிருந்தவர்களில் சிலர், தமிழ்நாடு முழுவதும் பல இடங்களில் மதரஸாக்கள் அமைத்து இருக்கிறார்கள். இருபது அல்லது முப்பது மாணவர்களை வைத்துக் கொண்டும், இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களை வைத்துக்கொண்டும் ஊரெல்லாம் வசூல் செய்து மதரஸா நடத்துகிறார்கள். மௌலவீ பட்டம் பெற்று வெளியே வருபவர்களில் பெரும்பான்மையினர் அதற்குத் தகுதி யுடையவர்களாக இல்லை என்று சொல்லப்பட்டது.

ஆகவே ஜமாஅத்துல் உலமா சபையால் பொதுத் தேர்வு வைத்துத் தகுதி, ஆற்றலின் அடிப்படையில் மௌலவீப் பட்டம் கொடுத்தால், தகுதியான மௌலவீ களை வெளிக்கொண்டு வரலாம் ஏழு ஆண்டுகள் காலத்தை ஓட்டி விட்டால் 'மௌலவீ' என்ற இழிந்த நிலை மாறிவிடும் என அபிப்பிராயம் சொல்லப்பட்டது.

உடனே அங்கிருந்த மௌலவீகளில் அநேகர் 'அப்படியெனில் எங்கள் மதரஸாக்களை இழுத்து மூட வேண்டியதுதான்' என்று சொன்னதை இன்று நினை விற்குக் கொண்டு வருகிறோம்.

ஆகவே (சூபிஸ) சீர்திருத்த, மறு சீரமைப்பு யோசனை முற்றாக அன்றைய கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டது.

காரணம் பெரும்பான்மை மௌலவீகளின் ஆதரவை மிகக் குறைந்தவர்களின் மறுசீரமைப்பு அறிவுரையால் சாதிக்க முடியவில்லை.

இந்த மௌலவீகள் செயல்பாடுகள் 1978-லும், அதற்கு முன்பும், அன்றும், இன்றும் எந்தச் சுய அறிவும் இல்லாத மூட்டையைச் சுமக்கும் கழுதைகளாகத் திகழ்வது (62:5) முஸ்லிம் சமூகத்துக்கு ஒரு சாபக் கேடாகும்.

எனவே இப்படிப்பட்டவர்களை நம்பி இவர்களின் மார்க்க அறிவைப் பயன்படுத்தி ஈடேற்றம் அடையலாம் என ஒருவன் நினைப்பா னானால், அல்லது இவர்களின் அறிவுரைப்படி நடப்பா னானால், தத்தமது ஈமானைத் '**தற்கொலை**' செய்வதற்கு ஒப்பாகும் என்ற உண்மையை அறிந்து கொள்ளுங்கள். ஆம் மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட மௌலவீகள் கோணல் வழிகளையே நேர்வழி யாகக் காட்டுவார்கள். (பார்க்க 2:78,79,174, 9:9,34, 31:6)